# எமது நாட்டிற்கு புதிய அரசியலமைப்பு ஏன் அவசியம் ?

அரசியலமைப்பு
கற்கைகளுக்கான
நிறுவனத்தின் பிரசுரம்

**தயாரித்தவர்**
**பேராதனைப்**
**பல்கலைக்கழகத்தின்**
**அரச அறிவியல் துறை**
**சிரேஷ்ட பேராசிரியர்**
**ஏ.எம்.நவரத்ன பண்டா**


ICS
ව්‍යවස්ථා අධ්‍යයන ආයතනය
அரசியலமைப்புக் கற்கைகளுக்கான நிறுவனம்
Institute For Constitutional Studies



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது நாட்டிற்கு புதிய அரசியலமைப்பு ஏன் அவசியம் ?

## அரசியலமைப்பு என்பது ஆட்சியின் இலக்கணமாகும்

இற்றைக்கு சுமார் 230 ஆண்டுகளுக்கு முன்னர் 1787 இல் அங்கீகரிக்கப்பட்ட அமெரிக்க அரசியலமைப்பைத் தயாரித்த அரசியலமைப்புச் சபை "தோமஸ் பெயின்" என்ற அரசியல் செயற்பாட்டாளரின் பகிரங்கக் கட்டுரையாக அமைந்தது. "நீங்கள் ஆட்சியின் இலக்கணத்தை எழுதுவதற்கு மாத்திரம் இங்கு சமூகம் தரவில்லை. தனிநபர் சுதந்திரத்தின் இலக்கணத்தை எழுதுவதற்கும் சமூகம் தந்துள்ளீர்கள் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள்" என்று அங்கு அவர் குறிப்பிட்டார். அரசியலமைப்புப் பற்றி மேற்கொள்ளப்படும் சரளமான அறிமுகமே இது. இதற்கமைய அரசியலமைப்பின் பிரதான கடமை ஆட்சிமுறைமைக்கான ஓர் இலக்கணத்தை வடிவமைப்பதாகும். ஆட்சியாளர்கள் தமது அதிகாரத்தை தனிநபர் சுதந்திரத்திற்கு தடைகளை ஏற்படுத்துவதைத் தடுப்பதற்கு பயன்படுத்துவதே இரண்டாவது பணியாகும்.

மேற்குறிப்பிட்ட கூற்றுக்கள் வழங்கும் செய்தி மிகத் தெளிவானது. ஒரு மொழிமூலம் உறவுகளை முன்னெடுக்கும்போது, அந்த மொழியைப் பயன்படுத்துவோருக்கு அதன் இலக்கணமே இலகுபடுத்துகிறது. இலக்கணம் தொடர்பான இப்பொது இணக்கப்பாடு காரணமாக மொழியை இலகுவாகப் புரிந்துகொள்வதற்கு இலக்கணம் வசதிபடுத்துகிறது. மொழியைப் பயன்படுத்துவோருக்கு இடையே கூட்டு உணர்வை ஏற்படுத்துவதற்கும் இது உதவியாக அமைகிறது. ஒரு மொழிக்கு இலக்கணம் எவ்வாறு முக்கியத்துவம் வாய்ந்ததோ ஆட்சிக்கும் ஓர் இலக்கணம் அவசியமாகும். ஆட்சிக்கு உரிய இலக்கணம் அரசியலமைப்பாகும். அரசியலமைப்பு, ஆட்சியாளர்கள் மற்றும் ஆளப்படுவோர் ஆகிய இரு தரப்பினரிடையே ஆட்சி முறைபற்றிய பொது உடன்பாட்டை ஏற்படுத்துகிறது. இதன்மூலம் ஆட்சி இலகுபடுத்தப்படுகிறது.

தனிநபர் சுதந்திரத்தின் இலக்கணமாக அதை எப்படி எழுதுவது? இது இக்கூற்றின் மிக முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாகும். ஆட்சியாளர்களுக்கு எல்லையற்ற அதிகாரம் வழங்கப்படக் கூடாதென்பதே இதன் பொருளாகும். ஆட்சியாளர்களுக்கு மட்டுப்பாடற்ற அதிகாரங்கள் வழங்கப்படும்போதே தனிநபர் சுதந்திரத்திற்கு இடையூறுகள் ஏற்படும். ஆட்சியாளர்களின் அதிகாரத்திற்கு மட்டுப்பாடுகளை விதிப்பதன் மூலமே தனிநபர் சுதந்திரத்தை சாத்தியமாக்க முடியும். இது சரி பார்த்தலுக்கான ஏற்பாடாகும். சட்டத்தை இயற்றும் பாராளுமன்றமும், நாட்டை ஆட்சிசெய்யும் அரசாங்கமும், நீதி நிருவாகத்தை மேற்கொள்ளும் நீதிமன்றமும், ஒன்றுக்கொன்று சரிபார்க்கும் நிறுவனங்களாக அமைவதன் மூலமே இதனைச் சாத்தியமாக்க முடியும். இந்த மூவகை அதிகாரங்களையும் ஒன்றுக்கொன்று தனித்தனியாக வேறாக்குவதன் மூலமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனைச் செய்ய முடியும். இவ்வதிகார வேறாக்கத்தின் முக்கிய அம்சம் ஏனைய இரு நிறுவனங்களில் இருந்தும் நீதித்துறையை சுயாதீனப்படுத்துவதாகும். இதன்மூலம் சுயாதீனமான வழக்கு விசாரணைகளை மேற்கொள்ளவும், குறிப்பாக பிரஜைகளின் உரிமைகளையும், சுதந்திரங்களையும் பேணிப்பாதுகாப்பதற்கும் அதிகாரம்கொண்ட ஓர் நிறுவனமாக இதனைக் கட்டியெழுப்ப வேண்டும். அரசியல்வாதிகளின் அதிகாரத்தை அத்துமீறிப் பயன்படுத்தாமல் பிரஜைகளின் அதிகாரத்தை வலுவூட்டுவதே அரசியலமைப்பின் அடிப்படைப் பொறுப்பென்பதை இது சுட்டிக்காட்டுகிறது. "ஒரு நாட்டின் ஆட்சி முறையில் அதிகாரப் பகிர்வு இல்லாதுவிடின், பிரஜைகளின் உரிமைகளைப் பாதுகாக்கும் சக்திவாய்ந்த பொறிமுறை இல்லாவிட்டால், அங்கு அரசியலமைப்பு கிடையாது." "தோமஸ் பெயினின்" பங்கேற்புடன் 1789 இல் எழுதப்பட்ட மனிதனினதும், (உலக) பிரஜையினதும். உரிமைகள்பற்றிய பிரான்ஸ் நாட்டு பிரகடனம் இவ்வாறே குறிப்பிடுகிறது.

ஆளும்தரப்பினரும், ஆளப்படும் தரப்பினரும் சட்டத்திற்கு அடிபணிய வைத்தல் அரசியலமைப்பின் மூலம் இடம்பெறுகிறது. ஆளும் தரப்பினரைப் போலவே ஆளப்படும் மக்களும் சட்டத்திற்கு ஏற்ப வழிநடத்துதல் அரசியலமைப்பு மூலம் மேற்கொள்ளப்படுகிறது. "நாம் ஓர் அரசனிடமிருந்து விடுவிக்கப்படுவதற்கு செயற்பட்டுக் கொண்டிருக்கிறோம். ஆனால், மற்றுமோர் அரசனை உருவாக்கிக் கொண்டிருக்கிறோம் என்பதை ஞாபகத்தில் வைத்திருங்கள். அதாவது அரசியலமைப்பே இதனை சாதிக்கிறது. அரசனே அரசியலமைப்பாகும் (ஊழுெ-ளவவைரவழைெ ளை வாந முைெ)" என தோமஸ் பெயின் இவ்விடயத்தை அன்று தெளிவுபடுத்தினார்.

நாட்டின் ஆட்சியை அங்கீகரித்த சட்டத்திற்கமைய இடம்பெறும் விடயமாக அரசியலமைப்பு அமைகிறது. அரசியலமைப்பு ரீதியாக நாட்டை நிருவகிப்பது அதன் விளைவாகும். இதனையே நாம் சட்டத்தின் ஆட்சியெனக் கூறுகிறோம். "உலகத்தில் வாழும் சிறந்த நபரின்கீழ் வாழ்வதைவிட, அங்கீகரித்த சட்டத்தின்கீழ் வாழ்வதை நான் விரும்புகிறேன்" என்று இற்றைக்கு சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் கிரேக்க தேசத்தின் அறிஞரான அரிஸ்டோட்டில் குறிப்பிட்டார். மிகச் சிறந்த நபர் மேற்கொள்ளும் ஆட்சியைவிட அங்கீகரிக்கப்பட்ட சட்டத்தின்கீழ் வாழ்வது சிறந்ததென்பதையே அவர் இதன்மூலம் குறிப்பிடுகின்றார். சட்டம் தனிநபர்களைப் போல நொடிக்கு நொடி மாறாத காரணத்தினால் நிலையான வழிமுறையை ஆட்சி ஏற்படுத்துகிறது. அது அனைவருக்கும் நீதியையும், சமமான கவனிப்பையும் வழங்குகிறது. அது தான்தோன்றித்தனமான ஆட்சி ஏற்படுவதை தடுக்கிறது.

மேற்கூறிய விடயங்களை அடைவதாயின் சிறந்த அரசியலமைப்பை உருவாக்க வேண்டுமென்பதையே இது எடுத்துக் கூறுகிறது. அரசியலமைப்பைத் தயாரிப்பதில் பங்குபற்றுவோர், அதிகாரம் பற்றிய தமது குறுகிய ஆசைகளைவிட, சமூகத்தின் எதிர்காலம்பற்றி சிந்தித்து அதனைத் தயாரித்தால் மாத்திரமே சிறந்த அரசியலமைப்பை உருவாக்கிக் கொள்ள முடியும். அனைவருக்கும் நியாயத்தை நிறைவேற்றுவது பற்றிய கவனம் செலுத்தினால் மாத்திரமே இது சாத்தியமாகும்.

அனைத்துப் பிரச்சினைகளையும் அரசியலமைப்புக்கள் மூலம் தீர்க்க முடியுமென நாம் கூறவில்லை. ஆனால், அரசியலமைப்பு அடிப்படையில் சாதிக்கக்கூடிய ஒரு விடயமுண்டு. ஆட்சி செய்ய வருவோருக்கு பொதுமக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கும் அதிகாரத்தை துஷ்பிரயோகங்களில் இருந்து தடுப்பதே இதுவாகும். தான்தோன்றித்தனமாக அதிகாரத்தைப் பயன்படுத்துவதை தடுத்து அரசியல் மற்றும் நிருவாகத் தீர்மானங்களை எடுப்பதற்கு நீதியும், தர்மமும் நாட்டில் உத்தரவாதப்படுத்த வேண்டும். இதன்மூலம் நாட்டில் ஆட்சி நிறுவனங்களில் நாகரீகத்தை உத்தரவாதப்படுத்த வேண்டும். இதனை நாம் அரசியல் நீதியென அழைக்கின்றோம்.

இத்தகைய அரசியலமைப்பிற்கு இனவாதம், மதவாதம், சாதிபேதம், வர்க்கபேதம், பால்நிலை போன்ற சமூகத்தின் பலவீனமான பகுதிகளுக்கு சமத்துவமற்ற முறையிலான கவனிப்பை பயன்படுத்தக்கூடிய உளவியல் கட்டமைப்பை நிருவகிக்க முடியும். மேற்கூறப்பட்டவை ஆட்சி நிறுவனங்களில் பிரவேசிப்பதைத் தடுத்து, நாகரீகமான சமூகத்தை கட்டியெழுப்புவதற்கு ஆற்றல் பெறமுடியும். அனைத்து மனிதர்களும் சிறந்த மனித வாழ்க்கையை முன்னெடுப்பதற்கு அவசியமான அடிப்படை சக்தியை வழங்குவதை இதன்மூலம் உறுதிப்படுத்த முடியும். பரந்துபட்ட உரிமைப் பிரகடனத்தின்மூலம் அனைவருக்கும் கல்வி, சுகாதாரம் மற்றும் சமூகப் பாதுகாப்பு உறுதிப்படுத்தும் வகையில் அரசாட்சியை முன்னெடுப்பதற்கு ஆட்சியாளர்களை நிர்ப்பந்திக்க முடியும். இதன்போது சமூகம் ஏதேனுமோர் நாகரீகமான நடத்தையை வழிநடத்த முடியும். கல்வி, மதம், கலாசாரம் மற்றும் கலை ஆகிய துறைகளில் அதனை மேலும் வலுவூட்டக்கூடிய நாகரீகமான நடைமுறையை மேம்படுத்த முடியும். நாகரீகமான சமூகத்தில் வாழ்வதற்கு எமக்கிருக்கும் உரிமையை இதன் விளைவாக உத்தரவாதம் செய்யமுடியும்.

தமக்கு அரசியலமைப்பின் மூலம் இத்தகைய பயன் கிடைப்பதன் காரணமாக ஒரு மதத்தை வழிபடுவது போல சிறந்த அரசியலமைப்பை அனுசரிப்பதற்கு நாட்டுப் பிரஜைகள் தூண்டப்படுவார்கள். எனவே, சிறந்த அரசியலமைப்பு சிவில் சமூகத்தின் மதம் என்றும் அடையாளப்படுத்த முடியும். எமது நாட்டின் அனைத்து இனங்களும் மதங்களும் மாத்திரமல்லாது ஒடுக்கப்பட்ட மக்கள் மத்தியிலும் ஒரு மதத்தைப் போல சமமாக வழிபடும் நிலைமை இன்றைய அரசியலமைப்பிற்கு உண்டா? இதுபற்றியே நாம் அடுத்து கலந்துரையாடப் போகின்றோம்.

## இலங்கையும், அரசியலமைப்பு ரீதியான ஆட்சியும்

நவீன யுகத்திற்கு நாம் பிரவேசித்த பின்னர் எமக்கு அரசியலமைப்பு ரீதியான ஆட்சிக்கான வழிகாட்டல் பிரித்தானிய காலனித்துவ காலகட்டத்திலேயே ஆரம்பிக்கப்பட்டது. 1833 முதல் 1931 வரையிலான காலத்தில் நான்கு அரசியலமைப்பு ரீதியான மறுசீரமைப்புக்களின்கீழ் காலனித்துவம் நிலவியது. பெரிய பிரித்தானியாவில், அந்நாட்டுப் பாராளுமன்றம், அரசனின் அதிகாரத்தை இக்காலகட்டத்திலேயே படிப்படியாகக் குறைத்தது. பாராளுமன்ற அரசியலமைப்பு இக்காலகட்டத்திலேயே உருவாக்கி முன்னெடுக்கப்பட்டது. இது பட்டதாரிகளான பிரித்தானிய சிவில் சேவை உத்தியோகத்தர்களால் முன்னகர்த்தப்பட்டது. இதன் காரணமாக உண்மையில் இலங்கைத் தீவில் ஆட்சி செய்வதற்குப் பதிலாக நிருவகித்தலே இடம்பெற்றது. இக்காலகட்டத்தில் ஏகாதிபத்தியத்தின் தேவைகள் பாதுகாக்கப்படுவதோடு வெளிநாட்டவர்கள் மற்றும் உள்நாட்டவர்கள் சுதந்திரமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலீடு செய்தனர். தொழில் முயற்சிகளில் ஈடுபடுவதற்கு வசதிகளை மேற்கொள்வது அவர்களின் அபிலாஷையாக இருந்தது. எனவே, உத்தியோகத்தர்களின் நிருவாகம் ஒரு சட்டத்திற்கமைய நெறிப்படுத்துவதற்கு அவசியமான ஏற்பாடுகள் தேவைப்பட்டன. 1833 இல் இலங்கையில் நீதி நிருவாகம் பற்றிய ஆணைப்பத்திரத்தின் மூலம், நீதிமன்றம் சிவில் உரிமைகளை பாதுகாப்பதற்கு செயற்படும் சுயாதீனத்துவத்தை உரித்தாக்கிக் கொண்டது. 1833 இல் ஓர் ஆட்சிமுறையை ஒழுங்கு செய்வதற்கு ஓர் சட்டத்தை இயற்றி சட்டவாக்க அதிகாரத்தையும், நிறைவேற்று அதிகாரத்தையும் நடைமுறைப்படுத்துவதற்கு, ஆளுநரிடமிருந்து சுயாதீனப்படுத்துவதற்கு ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. பிரதிநிதிகளின் சபையான சட்டவாக்கச்சபை, படிப்படியாக உள்நாட்டு மத்திய வர்க்கத்தின் பிரதிநிதிகளின் பெரும்பான்மையினரிடம் கையளிக்கப்பட்டது. சிறிதுகாலம் செல்லச் செல்ல காலனித்துவ நாடுகளில் சுயாட்சியை வழங்குவது அவசியமென பிரித்தானிய பாராளுமன்றத் தலைவர்கள் ஏற்றுக்கொண்டனர். இதன் விளைவாக உள்நாட்டு மத்தியதர வர்க்கத்திற்கு படிப்படியாக வாக்குரிமையும் ஆட்சியில் பங்கேற்கும் வாய்ப்பும் வழங்கப்பட்டன.

1931 இல் சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்டது. அதன் பிரதிபலனாக சாதாரண மக்களும் அரசியலில் பங்கேற்பதற்கு சந்தர்ப்பம் உதயமாகியது. இச்சந்தர்ப்பத்தில் உருவாக்கப்பட்ட அரசியலமைப்பின் மூலம் உள்நாட்டுத் தலைவர்களுக்கு சட்டங்களை இயற்றும் முழு அதிகாரத்திலும், நிறைவேற்று அதிகாரத்தின் ஒரு பகுதியிலும் பங்கேற்க வாய்ப்புக் கிட்டியது. முதல் முறையாக உள்நாட்டுத் தலைவர்கள் அமைச்சரவையின் உறுப்பினர்களானார்கள். இக்காலகட்டத்தின்போது நீதித்துறை, நிறைவேற்றுத்துறை மற்றும் சட்டவாக்கத்துறை என்ற இரண்டு நிறுவனங்களில் இருந்து சுயாதீனமடைந்த, அரசாங்கத்தின் மூன்றாவது நிறுவனமாக மாற்றமடைந்திருந்தது. 1930 களில் ஒரு சந்தர்ப்பத்தில் சமசமாஜக் கட்சியுடன் தொடர்பு கொண்டு, அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்ட காரணத்தினால் “பிரேஸ் கேர்டில்” என்ற அவுஸ்திரேலிய நாட்டவரை இலங்கையில் இருந்து நாடு கடத்துவதற்கு ஆளுநர் வழங்கிய சட்டவிரோதமான கட்டளையை நீதிமன்றத்தின் மூலம் அதிகாரமற்றதாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. இவ்வகையில் இக்காலகட்டம் முழுவதும் நீதித்துறையினால் எமது சிவில் உரிமைகளை கட்டியெழுப்புவதற்கு அவசியமான பல நடவடிக்கைகள் எமது சட்டத்தொகுதியில் சேர்க்கப்பட்டன. ஆளொருவர் தான்தோன்றித் தனமான முறையில் கைது செய்வதைத் தடுக்கும் ஆட்கொணர்வு மனு சட்ட ஏற்பாடுகளை, நீதித்துறைக்கு நீதிமன்றம் அறிமுகப்படுத்தியது. இதன் காரணமாக நாம் சுதந்திரம் பெறும்போது நிலவிய அரசியலமைப்பு, அதாவது 1947 இன் சோல்பரி அரசியலமைப்பு தனிநபர்களுக்கும், சமூகத்திற்கும் - விசேடமாக அநீதியையும் சமத்துவமின்மையையும் ஏற்படுத்துவதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் பொறுப்பு அரசியலமைப்பின் 29 ஆவது வாசகத்தின் மூலம் நீதிமன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டது. இவ்வாறாக காலனித்துவ ஆட்சிக்காலகட்டத்தில் நாம் தாராண்மைவாத ஜனநாயக ஆட்சியை ஸ்தாபிக்கும் திசையை நோக்கிப் பயணிக்க முடிந்தது.

மேற்படி அரசியலமைப்பின் ஏற்பாடுகளின்கீழ் செயற்பட முடியாமை காரணமாகவே நாம் 1972 இல் சோல்பரி அரசியலமைப்பை நீக்கி இலங்கைத்தீவை ஓர் குடியரசாக பிரகடனப்படுத்தினோம். 1972 அரசியலமைப்பு இலங்கையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு குடியரசாக மாற்றியமைத்ததோடு, பிரித்தானியருடன் நிலவிய அரசியலமைப்புத் தொடர்புகள் முறிக்கப்பட்டன. ஆனால், மேற்படி அரசியலமைப்பு 1833 இல் இருந்து ஆட்சித்துறையில் செயற்படுத்தப்பட்ட அதிகார வேறாக்கம் என்ற கோட்பாட்டை நீக்கி அனைத்து அதிகாரங்களும் ஒரு நிறுவனத்தின்கீழ் குவிமையப்படுத்தப்பட்டது. அனைத்து அரசாங்கங்களின் அதிகாரங்கள் தேசிய அரச பேரவைக்கே உரியதெனக் குறிப்பிட்டு அது அரசின் மகோன்னத நிறுவனமென அழைக்கப்பட்டது. ஆனால், அரசியல் ரீதியாக நிறைவேற்றுத்துறை கூடிய வலுவுடையதாக மாற்றப்பட்டது. மிகவும் பலம்பொருந்திய பதவியாக பிரதமர் பதவி உருவாக்கப்பட்டது. காரணம் தேசிய அரசப் பேரவையின் அதிகப்படியான உறுப்பினர்களை பிரதமர் பதவியின் மூலம் கட்டுப்படுத்தப்பட்டது. நிறைவேற்று அதிகாரங்களை குவிமையப்படுத்தி வழிநடத்துவதற்கு பிரதமருக்கு வாய்ப்பளிக்கப்பட்டது. இந்த அரசியலமைப்பின் இறுதிக் காலகட்டத்தின்போது அவசரகால நிலைமைகளின்கீழ் நாடு ஆட்சிசெய்யப்பட்டது. இதன் காரணமாக அவசரகால ஒழுங்குவிதிகள் மூலம் நாட்டை ஆட்சிசெய்வதற்கான வாயப்புக் கிட்டியது. மேற்படி அரசாங்கம் பலவந்தமாக வீழ்ச்சியுறும் காலகட்டத்தில் ஒரு அமைச்சரின் கையில் நிதி, அரசாங்க நிருவாகம், உள்நாட்டு விவகாரங்கள், நீதித்துறை மற்றும் உள்ளூராட்சி ஆகிய அனைத்து அமைச்சுக்களும் ஒப்படைக்கப்பட்டு, பிரதமரால் (திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவினால்) நாட்டை ஆட்சிசெய்ய முடிந்தது. இந்த அரசியலமைப்பு நிறைவேற்று அதிகாரத்தை மத்தியத்துவப்படுத்தப்பட்டு ஒழுங்கு செய்யப்பட்டபடியால், அது சாத்தியமாயிற்று. இறுதியில் நீதிமன்றமே பலவீனமான நிறுவனமாக மாறியது. அரசியலமைப்பிற்கு தனிநபர்களினதும், எண்ணிக்கையில் சிறுபான்மையினரதும் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு இருந்த அதிகாரம் நீக்கப்பட்டது. பாராளுமன்றம் இயற்றிய ஒரு சட்டத்தை பின்னர் நீதிமன்றம் கேள்விக்குட்படுத்தக்கூடிய ஓர் அதிகாரம் முன்னைய அரசியலமைப்பில் இருந்தது. அந்த அதிகாரமும் 1972 அரசியலமைப்பில் நீக்கப்பட்டது. இவை அனைத்தும் இடம்பெறும்போது மற்றுமோர் முக்கிய விடயம் இடம்பெற்றது. அதாவது, சுயாதீன அரசசேவைகள் ஆணைக்குழு இல்லாதொழிக்கப்பட்டது. அரசசேவை அமைச்சரவையின் நேரடி நிருவாகத்தின்கீழ் கொண்டுவருவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. அரச வளங்களுக்கு பொதுமக்களின் பொறுப்பேற்பை மேற்கொள்ளக்கூடிய விசேட சேவையாக செயற்பட வேண்டிய அரச உத்தியோகத்தர்கள் அரசியல் மயப்படுத்துவதற்கான ஆரம்ப முயற்சி இதுவாகும்.

1972 இல் மேற்கொண்ட அதிகாரங்களை மையப்படுத்துதல், 1978 இல் அறிமுகம் செய்யப்பட்ட அரசியலமைப்பிலும் முன்னெடுக்கப்பட்டது. நிறைவேற்று ஜனாதிபதி முறைமை 1977 இல் அறிமுகம் செய்யப்பட்டது. 1977 ஆகும்போது முதலாவது குடியரசு அரசியலமைப்பிற்குக் கொண்டுவரப்பட்ட இரண்டாவது திருத்தத்தின் மூலம் பிரதமரிடமிருந்த அதிகாரங்கள் ஜனாதிபதியின் கைக்கு மாறியது. புதிய அரசியலமைப்பு அங்கீகரிக்கப்படுவதன் மூலம் இது ஏற்படவில்லை. புதிய அரசியலமைப்பை அங்கீகரிப்பதாயின், நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி சத்தியப்பிரமாணம் செய்து, புதிய ஜனாதிபதி ஏழு மாதங்களுக்கு மாத்திரமே பதவி வகிக்க முடிந்தது. மேற்படி ஜனாதிபதி பதவியை மேலும் வலுவூட்டும் ஏற்பாடுகளை உட்புகுத்தியே இது மேற்கொள்ளப்பட்டது. தமது உடலுக்கு ஏற்ற வகையில் சட்டையை தைத்தல் போன்ற நடவடிக்கையே இது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன்பின்னர் வரும் நபர்களுக்கு இந்த ஆடை பொருத்தமாக அமையவில்லை. எனவே, இப்போதைக்கு இந்த அரசியலமைப்பிற்கு 19 திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்தத் திருத்தங்களில் ஒருசிலவற்றை ஒன்றுக்கொன்று முரணான குறிக்கோள்களைக் கொண்டு அறிமுகப்படுத்தப்பட்டபடியால், இந்த அரசியலமைப்பு இன்றைய காலகட்டத்திற்கு ஒவ்வாத சில்லுகளைப் பொருத்திய நாலு திசைகளுக்கும் அசையும் வண்டியாக அமைந்துள்ளது.

## 1978 அரசியலமைப்பை ஏன் நீக்க வேண்டும்?

இன்று நடைமுறையில் உள்ள அரசியலமைப்பை நீக்கி சாதாரண அமைச்சரவை முறைமையை நோக்கி நாம் திரும்பிச் செல்ல வேண்டுமென்று இந்த அரசியலமைப்பு உருவாக்கப்பட்ட தினத்திலிருந்து ஆர்ப்பாட்டங்கள் நிகழ்ந்தன. கலாநிதி என்.எம்.பெரேரா, 1978 அரசியலமைப்பைப் பற்றி விமர்சன ரீதியான ஒரு விளக்கத்தை எழுதியுள்ளார். இதற்கான காரண காரியங்களை மிக தர்க்க ரீதியாக முன்வைத்து நிறுவியுள்ளார். 1982 ஜனாதிபதித் தேர்தலின்போது திரு.ஹெக்டர் கொப்பேகடுவ அவர்களின் தலைமையிலான இயக்கமும் இந்த அரசியலமைப்பை நீக்கி, 1972 அரசியலமைப்பு மீள ஸ்தாபிக்கப்படுமென மேற்படி பொதுத்தேர்தலில் வாக்குறுதி வழங்கியது. ஆனால், அவர் அத்தேர்தலில் தோல்வியுற்றார். இத்தேர்தலின்போது பெற்ற வெற்றியை திரு.ஜயவர்த்தன பாராளுமன்றத்தின் பதவிக் காலத்தை தேர்தல் நடத்தாமலேயே ஆறு ஆண்டுகளால் நீடித்துக் கொண்டார். மிகவும் பலம்வாய்ந்த தேர்தல் வன்முறையைப் பயன்படுத்தி மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பின்மூலம் இது மேற்கொள்ளப்பட்டது. இதன்மூலம் மக்களின் அபிப்பிராயம் தோற்கடிக்கப்பட்டு தனது அதிகாரத்தை வெற்றிபெறச் செய்தார்.

இவ்வாறாக 1978 அரசியலமைப்பின்கீழ் நாம் பெற்ற இந்த முதல் அனுபவம், தேர்தல் வரைபடம் ஆறு ஆண்டுகளுக்கு மூடப்பட்டமதகும். இலங்கை வரலாற்றில் மிக ஊழல் மிகுந்த தேர்தல்பற்றிய அனுபவங்கள் கிடைத்ததாக அன்று தேர்தல் ஆணையாளரின் அறிக்கைமூலம் பின்னர் எடுத்துக் கூறப்பட்டது.

1977 ஆரம்பமாகிய ஐக்கிய தேசியக்கட்சியினரின் ஆட்சி 17 ஆண்டுகளின் பின்னர் ஓய்ந்தது. 1994 பொதுத் தேர்தலின்போது நிறைவேற்று ஜனாதிபதி முறையை இல்லாதொழிப்பதே பிரதான தேர்தல் கோஷமாக அமைந்தது. இக்காலகட்டத்தில் ஜனாதிபதி பதவியானது ஒடுக்குமுறையையும், பயங்கரத்தையும், ஊழலையும் ஏற்படுத்துவதற்குக் காரணமான நிறுவனமாகவே கருதப்பட்டது. ஜனாதிபதி பதவியை இல்லாதொழிப்பதாக உறுதிமொழி கூறியே, 1994 இல் திருமதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரணதுங்க ஆட்சிபீடம் ஏறினார். அன்று முதல் இன்றுவரை இடம்பெற்ற அனைத்து ஜனாதிபதி தேர்தல்களிலும் மேற்படி வாக்குறுதி முன்னணிக்கு வந்தது. 2005 இல் திரு. மகிந்த ராஜபக்ஷ இந்த வாக்குறுதியை வழங்கினார். 2015 இலும் அவர் இந்த வாக்குறுதியை வழங்கியதோடு நின்றுவிடாமல் புதிய அரசியலமைப்பைக் கொண்டு வருவதாக ஒரு பிரகடனத்தையும் செய்தார். 2015 இல் இன்று பதவி வகிக்கும் ஜனாதிபதியும் நிறைவேற்று ஜனாதிபதிப் பதவியை இல்லாதொழித்து தான் வீட்டுக்குப் போவதாக உறுதியுரை கூறியே பதவிக்கு வந்தார். நிறைவேற்று ஜனாதிபதிப் பதவியை உருவாக்குவதற்கு எழுதப்பட்ட ஒட்டுமொத்த அரசியல் யாப்பையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீக்குவதன்மூலமே நிறைவேற்று ஜனாதிபதி பதவியை இல்லாதொழிக்க முடியும். ஒட்டுவேலை செய்யும் திருத்தங்களுடன் அதனை செய்ய முடியாது. எனவே, புதிய அரசியலமைப்பை இயற்றுவதற்கு மக்கள் ஆணை கிடைக்கவில்லையென்று கூற இவ்வரசாங்கத்திற்கு வாக்களித்த வாக்காளர்களால் கூறமுடியாது.

## புதிய அரசியலமைப்பை வரைதல்

இம்மக்கள் ஆணைக்கமைய அரசியலமைபபைத் தயாரிக்கும் சபையாக பாராளுமன்றம் திகழ்கிறது. புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இப்பணியை மேற்கொள்வதற்கு பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளினதும் பல்வேறு குழுக்களினதும் தலைவர்கள் பங்குபற்றும் வழிகாட்டல் குழு ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ளது. அனைத்து பாராளுமன்றக் கட்சிகளும் இக்கட்டமைப்பை ஏற்றுக்கொண்டுள்ளன. அரசியலமைப்பு தயாரிக்கும்போது நாட்டின் அனேகமானோரின் கவனத்தை ஈர்த்துள்ள விடயங்களைப்பற்றி இக்குழுவில் கலந்துரையாடப்பட்டு வருகிறது. அரசியல் இயல்பு, மக்களின் இறைமை, பௌத்த மதத்திற்கான முதன்மை இடம், மதங்களை வழிபடுவதற்கான சமஉரிமை, நிறைவேற்று அதிகாரத்தை ஒழுங்கமைத்தல், அதிகாரத்தைப் பகிர்தல், தேர்தல் முறைமை போன்ற முக்கிய விடயங்களைப் பற்றிய அடிப்படைக் கலந்துரையாடல்கள் இக்குழுவிலேயே கலந்துரையாடப்படுகின்றன.

எனவே, மேற்கூறிய விடயங்களைப்பற்றிய இறுதித் தீர்மானத்தை மேற்கொள்வதற்கு சகல குழுக்களும் போதியளவு இணக்கப்பாட்டை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். பெரும்பான்மையைப் போலவே சிறுபான்மை மக்களை அல்லோலகல்லோலப்படுத்தும் இடையீடுகளை ஏற்படுத்துவதை தடுப்பதற்கு மேற்கொண்டுள்ள முறைமையை இதன்மூலம் காணமுடிகிறது. அரசியலமைப்பைத் தயாரிக்கும்போது விகாரமடையச் செய்யும் தவறான பிரசாரங்களை தடுப்பதற்கான கவனத்தைச் செலுத்துவது அவசியமாகும். வரையப்படும் அரசியலமைப்பு அரசியல் ரீதியான அதிகாரப் போராட்டமாக மாறியதை தடுக்க வேண்டியதன் காரணமாகவே இது மிக அவசியமாகிறது. இது அரசியல் கட்சிகளின் அதிகாரப் போராட்டத்திற்கு வெளியே வைத்திருக்க வேண்டும். ஏனெனில் பொதுமக்கள் சுதந்திரமாகப் பணியாற்றக் கூடிய சுற்றாடலை உருவாக்கிக்கொள்ள வேண்டியதன் காரணத்தினாலேயே இது அவசியமாகிறது.

அரசியலமைப்பை மறுசீரமைப்பது பற்றிய பொதுமக்களின் கருத்துக்களை ஒர் குழுவின்மூலம் பெற்று அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் யோசனைகளையும் உள்ளடக்குவதா? என்பதை அரசியலமைப்புச் சபையும், பல்வேறு உபகுழுக்களும், வழிகாட்டல் குழுவும் தீர்மானிக்கும். இறுதியில் அனைத்து யோசனைகளையும் அறிக்கைகளையும் கவனித்து கட்சித் தலைவர்களினால் ஏற்றுக்கொள்ளப்படும் பரிந்துரைகள் மாத்திரம் அரசியலமைப்புச் சபைக்கு சமர்ப்பிக்கப்படும். இச்சந்தர்ப்பத்தின்போது முழுப் பாராளுமன்றமும் ஓர் அரசியலமைப்புச் சபையாக மேற்படி பரிந்துரைகளை கலந்துரையாடுவதோடு, பொதுமக்கள் இக்கலந்துரையாடல்களை வாசிப்பதற்கு வாய்ப்பினைப் பெறுவர். இதுபற்றி விவாதிப்பதற்கும் சந்தர்ப்பம் கிடைக்கிறது. இறுதியில் இவ்வாறான இணக்கப்பாட்டின் மூலமே அரசியலமைப்பு வரைவு தயாரிக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதி வரைவு நீதிமன்றப் பரிசீலனைக்கு உட்படுத்தப்படும் அதேசமயம் சிவில் பிரஜைகளுக்கும் குழுக்களுக்கும் இப்பரிசீலனையை தொடர்புகொள்வதற்கு வாய்ப்புக் கிட்டும். இவை அனைத்திற்கும் பின்னர் அரசியலமைப்பு வரைவு பாராளுமன்றம் என்ற வகையில் அனைத்து உறுப்பினர்களாலும் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படுவதோடு 2/3 பெரும்பான்மை வாக்குகளால் அங்கீகரிக்கப்பட வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்பட்டால் மாத்திரமே அது பொதுஜன அபிப்பிராய வாக்கெடுப்புக்கு விடப்பட்டு பொதுமக்களின் அங்கீகாரத்தைப் பெறவேண்டும். இதற்கு அனைத்துக் கட்சிகளினதும் சம்மதத்தைப் பெறவேண்டும். தனிக்கட்சியொன்று இதனைச் செய்ய முடியாது. ஏனெனில் இன்று எந்தவொரு தனிக்கட்சிக்கும் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை அதிகாரம் கிடையாது. இரண்டு பிரதான கட்சிகளும் இன்று கூட்டாக ஆட்சியை நடத்துகின்றன. அரசியலமைப்பு தொடர்பாக அவற்றுக்கிடையே பரந்துபட்ட இணக்கப்பாட்டை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். மிகவும் ஜனநாயக ரீதியான பயணத்தை முன்னெடுப்பதன் ஊடாக மாத்திரமே புதிய அரசியலமைப்பு சாத்தியமாகுமென்பதே இதன்மூலம் தெரிகிறது. பிறக்காத பிள்ளைக்கு சாதகம் பார்ப்பதைப்போல உருவாக்கப்படாத அரசியலமைப்பைப்பற்றி அதனை பெரும் பூதமாக எடுத்துக் காட்டுவோர்மீது பொதுமக்கள் கவனமாக இருத்தல் வேண்டும். அரசியலமைப்பை கட்சிகளுக்கு இடையேயான அரசியல் அதிகாரப் போராட்டமாக பயன்படுத்தக் கூடாது. அது மக்களுக்கே அவசியப்படுகிறது. ஆட்சியாளர்களின் அதிகாரத்தை மட்டுப்படுத்தி பிரஜைகளின் அதிகாரத்தைக் கட்டியெழுப்புவதற்கே புதிய அரசியலமைப்பு தேவைப்படுகிறது. இதன் காரணமாகவே புதிய அரசியலமைப்பு மக்களின் தேவையென நாம் வலியுறுத்தி வருகிறோம்.

எனவே, மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பு வரையிலான முழுக் காலகட்டத்திலும் மக்கள் இச்செயற்பாட்டில் தொடர்புகொள்வது அவசியமாகும். இதுபற்றி பிரஜைகள் என்ற முறையில் நாம் அறிவூட்டப்பட்டு இருக்க வேண்டும்.

## புதிய அரசியலமைப்பு வேண்டாமா?

இதனிடையே அரசியல் துறையில் வேறு கலந்துரையாடலும் இடம்பெற்று வருகிறது. புதிய அரசியலமைப்பு அவசியம் என்பதைச் சுட்டிக்காட்டவே இதன்மூலம் முயற்சி செய்யப்படுகிறது. அவர்களில் சிலருக்கு நடைமுறையில் உள்ள அரசியலமைப்பிற்கு ஒருசில திருத்தங்கள் மாத்திரம் கொண்டுவந்தால் போதுமானது. நிறைவேற்று ஜனாதிபதி முறையை தொடரந்து வைத்திருந்தால் போதுமானது. இன்னும் சிலருக்கு தேர்தல் முறை மாத்திரம் மாற்றப்பட்டால் போதுமானது. பொதுமக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பிற்குச் செல்லும்வகையில் புதிய அரசியலமைப்பை உருவாக்கினால் மாத்திரம் போதுமானது. பாராளுமன்றத்தில் மேற்கொள்ளப்படும் அரசியலமைப்பிற்கான திருத்தத்தின்மூலம் மாத்திரம் அதனைச் செய்ய முடியாது என்பதை கடந்த 19 ஆவது திருத்தத்திற்கான சந்தர்ப்பத்தின்போது இந்நாட்டின் நீதித்துறை தீர்மானித்துள்ளது. புதிய அரசியலமைப்பு ஏன் அவசியமாகிறது என்பதுபற்றி பின்னர் கலந்துரையாடுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்களின் அபிப்பிராயத்தைப் பெறாமலேயே 1978 அரசியலமைப்பு அங்கீகரிக்கப்பட்டது

தற்போதைய அரசியலமைப்பு 1978 இல் அங்கீகரிக்கப்பட்டது. அன்றுமுதல் கடந்த 38 ஆண்டுகள் கடந்துள்ளன. அன்று இந்த அரசியலமைப்பை இயற்றுவதில் முன்னணிப் பாத்திரம் வகித்தோருக்கு இன்று எமக்குள்ள அவசியம் அவர்களுக்கு இருக்கவில்லை. அன்று அதிகாரத்தில் இருந்த திரு.ஜே.ஆர்.ஜயவர்த்தனா 1977இல் பெற்ற அதிகாரத்தை மீண்டும் மக்கள் மத்தியில் சென்று நீடித்துக் கொள்ளாமல் தன்னிடம் தக்க வைப்பதற்கே நடவடிக்கைகளை மேற்கொண்டார். 1982 இல் சர்வஜன வாக்கெடுப்பை நடத்தி பாராளுமன்றத்தின் ஆயுட்காலத்தை நீடித்துக் கொண்டார். மீண்டும் நாலு ஆண்டுகளில் ஜனாதிபதி தேர்தலை நடத்திய அவர் 1994 வரை தனது கட்சி அதிகாரத்தில் இருக்கக்கூடிய வகையில் நடவடிக்கைகளை மேற்கொண்டார். தான் நீண்ட காலத்தின் பின்னர் பெற்றுக்கொண்ட அதிகாரத்தை மேலும் உறுதிப்படுத்திக்கொண்டு அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்வது மாத்திரமல்லாமல், 1933 முதல் கட்டியெழுப்பப்பட்டிருந்த நலன்புரி அரசை உடைப்பதற்கு அவர் விரும்பினார். இந்த அரசியலமைப்பு 1978 செப்டெம்பர் 30 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டது. ஆனால், அந்நிலைமையில் நிறைவேற்று ஜனாதிபதி பதவியை ஸ்தாபித்து திரு.ஜயவர்த்தனா சத்தியப்பிரமாணம் செய்திருந்தார். 1978 பெப்ருவரி 04 ஆந் திகதி அது இடம்பெற்றது. 1972 இன் குடியரசு அரசியலமைப்பிற்கு கொண்டுவரப்பட்ட 2 ஆவது திருத்தத்தையே அவர் தனது நோக்கத்திற்காகப் பயன்படுத்தினார்.

## 1972 குடியரசு அரசியலமைப்பின் கீழேயே ஜனாதிபதி பதவி உருவாக்கப்பட்டது

1972 அரசியலமைப்பில் அதிகாரம் ஒழுங்குபடுத்தப்பட்டு இருந்த முறைமையின்படி ஜனாதிபதி பதவியின் அதிகாரம் அரசியலமைப்பில் எழுதப்பட்டிருந்தவாறு ஒரு திருத்தத்தின் மூலம் நிறைவேற்று ஜனாதிபதியின் கைகளில் மாறியது. இது திரு.ஜே.ஆர்.ஜயவர்த்தனவிற்கு மிக இலகுவாக அமைந்தது. "பிரதமரால் ஜனாதிபதி நியமனம் பெறுவதையும் ஜனாதிபதி பிரதமரின் ஆலோசனைக்கமைய செயற்பட வேண்டும்" என்ற கருத்தைக் கொடுக்கும் உறுப்புரைகள் நீக்கப்பட்டன. பாராளுமன்றத்திற்கு ஓர் பிரேரணை கொண்டுவரப்பட்டு, ஜனாதிபதி பதவியில் இருந்து அவரை விலக்குவதற்கு பிரதமருக்கு அதிகாரம் ஒப்படைக்கப்பட்ட உறுப்புரையும் இவ்வாறு இலகுவில் நீக்கப்பட்டது. இத்தகைய ஏற்பாடுகளை பயன்படுத்துவதன்மூலம் ஜனாதிபதி நிறைவேற்று அதிகாரியாக நியமிக்கப்படுகிறார். மேற்படி பதவியின் அதிகாரங்களுக்கு நிலவிய தடைகளை நீக்குவதன்மூலம் இயல்பாகவே ஜனாதிபதி பதவி மேலே உயர்த்தப்பட்டது. அவர் பூரண அதிகாரமுடைய நிறைவேற்று அதிகாரியாக நியமனம் பெற்றார். இவை அனைத்தும் எழுதப்பட்டதன் பின்னர் "அச்சந்தர்ப்பத்தில் பிரதமர் பதவியை வகித்த பாராளுமன்ற உறுப்பினர் 1978 பெப்ருவரி 04 ஆந் திகதி ஜனாதிபதியாக நியமனம் பெறுவார்" என்று அரசியலமைப்பிற்கான திருத்தத்தில் மேலும் குறிப்பிடப்பட்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முழு நாடும் நித்திரை கொண்டிருந்தபோது பதவிக்கு வந்த நிறைவேற்று ஜனாதிபதி

இத்திருத்தம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மக்கள் மத்தியில் கலந்துரையாடப்படவில்லை. அவ்வாறு கலந்துரையாடுவதற்கு அது பகிரங்கப்படுத்தவும் இல்லை. அரசியலமைப்பிற்கான திருத்தம் அது அமுலுக்கு வந்த தினத்திற்கு முதல் நாள் காலையில் திடீரென ஓர் சட்ட வரைவாக நீதிமன்றத்தின் கருத்தைப் பெற்று அன்று மாலையே அங்கீகரிக்கப்பட்டதை, நாம் மறுநாள் காலை பத்திரிகை வாயிலாகவே அறிந்தோம் "நேற்று மாலை 02 மணிக்கும் இரவு 09 மணிக்குமிடையில் பாராளுமன்றத்தில் இத்திருத்தம் அங்கீகரிக்கப்பட்டது" என்று காலைப் பத்திரிகைகளில் செய்தி வெளியிடப்பட்டு இருந்தது. இவ்வாறாக மக்கள் நித்திரை கொண்டிருந்த இரவு வேளையில் 6 மணித்தியாலங்களுக்கும் குறைந்த நேரத்தில் நிறைவேற்று ஜனாதிபதி பதவி இலங்கைக்கு அறிமுகப்படுத்தப்பட்டது.

1947 இல் இருந்து நிலவிய அமைச்சரவை அரசாங்க முறைமை நிறைவேற்று ஜனாதிபதி முறைமையாக மாற்றப்பட்ட மாற்றம் இவ்வாறாகவே ஆரம்பிக்கப்பட்டது. 1947 அரசியலமைப்பின் கீழ் நிலவிய முறைமையின் கீழ் பேரளவிலான நிறைவேற்றுத்துறை ஆளுநராவார். ஆளுநருக்கு எதிராக வழக்குத் தொடர முடியாது. காரணம் ஆளுநர் இங்கிலாந்து அரசியின் பிரதிநிதியாக இருத்தலும், இங்கிலாந்தின் அரசியைப் போலவே அரசியல் ரீதியாக தவறு செய்யமாட்டார் என்ற முன் தீர்ப்புக் கோட்பாட்டின் அடிப்படையிலேயே இது இடம்பெற்றது. பேரளவிலான ஒரு பதவியான இப்பதவியை வகிப்பவர் சகல நடவடிக்கைகளையும் பிரதமரின் அல்லது அமைச்சர்களின் ஆலோசனையின்கீழ், அரசியல் பொறுப்பு ஒப்படைக்கப்படக் கூடாது என்ற அடிப்படையிலேயே இது நிகழ்ந்தது. இது 1972 அரசியலமைப்பை முன்னகர்த்தியது. அன்று ஜனாதிபதி பேரளவிலான நிறைவேற்றுனராகவே செயற்பட்டார். 1977திருத்தின்மூலம் ஜனாதிபதி அரசியல் நிறைவேற்றுனராக நியமிக்கப்பட்டாலும் மேற்கூறிய உறுப்புரை நீக்கப்படவில்லை. இவ்வாறாக அரசியல் தலைவராகிய ஜனாதிபதி சட்டத்திற்கு மேல் வைக்கப்பட்டார்.

## மட்டற்ற அதிகாரங்களைக் கொண்ட ஜனாதிபதிப் பதவியை உருவாக்குதல்

இவ்வாறாக சிருஷ்டிக்கப்பட்ட ஜனாதிபதி பதவியின் அதிகாரங்கள் மட்டுப்பாடற்ற வகையில் வலுப்படுத்துவதை இலக்காகக் கொண்டு 78 அரசியலமைப்பு தயாரிக்கப்பட்டது. தேர்தல் முறைமை ஆகிய அனைத்தும் ஜனாதிபதி பதவியை வலுவூட்டுவதற்கு அவசியமான வகையிலேயே தயாரிக்கப்பட்டன. ஜனாதிபதி பதவியின் அதிகாரங்களை பலவீனப்படுத்தக்கூடிய சகல துறைகளும் நீக்கப்பட்டன. ஜனாதிபதி பதவிக்கு தெரிவு செய்யப்படுபவர் இரண்டு தடவைகளுக்கு மேல் அப்பதவியை வகிக்க முடியாது என்ற மட்டுப்பாடு மாத்திரமே உருவாக்கப்பட்ட ஒரே கட்டுப்பாடாகும். ஆனால் ஒப்படைக்கப்பட்ட அதிகாரம் மிகவும் விசாலமானது. ஜனாதிபதி அரசின் தலைவராவார். நிறைவேற்றுத்துறையின் தலைவராவார். அரசாங்கத்தின் தலைவராவார். அனைத்து ஆயுதப் படைகளினதும் சேனாதிபதியாவார். அரசின் தலைவராகும்போது எதுவிதமான பேதமுமின்றி அனைத்து மக்களினதும் தலைவராக செயற்பட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். ஆனால், நிறைவேற்றுத்துறையின் தலைவராகச் செயற்படும்போது நிலைமை அதற்கு முற்றிலும் எதிராகவே அமைந்தது. ஜனாதிபதியே அமைச்சர்களை நியமித்தார். ஜனாதிபதியினால் ஒப்படைக்கப்படும் நிறைவேற்று பொறுப்புக்களே அமைச்சர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. ஆனால், அதிகாரங்கள் ஒப்படைக்கப்படவில்லை. ஜனாதிபதி நியமிக்கும் அமைச்சர்கள் அமைச்சரவை என்பவற்றால் அரசாங்கம் அமைந்தது. அந்த அரசாங்கத்தின் தலைவர் ஜனாதிபதியாவார். எனவே, அமைச்சரவைக் கூட்டங்களின் தலைவராக ஜனாதிபதியே செயற்பட்டார்.

ஜனாதிபதி தான்தோன்றித்தனமாக அமைச்சர்களை நியமிக்கவும், அவர்களை பதவிகளில் இருந்து நீக்கவும்கூடிய வகையில் அரசியலமைப்பின் மூலம் அவருக்கு அதிகாரம் கிடைத்தது. அமைச்சர்கள் மாத்திரமல்லாது தான்தோன்றித்தனமாகப் பிரதமரை நியமிக்கும் அதிகாரமும் ஜனாதிபதிக்கு உரித்தானது. "பாராளுமன்றத்தின் பெரும்பான்மை உறுப்பினர்களின் நம்பிக்கையை வென்றெடுத்தவர் என்று ஜனாதிபதி கருதும் பாராளுமன்ற உறுப்பினர்" பிரதமராக நியமிக்கப்பட வேண்டுமென அரசியலமைப்பில் குறித்துரைக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதிக்கு பிரதமரை நியமிக்கும் அதிகாரம் உண்டு என்பதே இதன்மூலம் எடுத்துரைக்கப்படுகிறது. ஜனாதிபதி "கருதும்" பாராளுமன்ற உறுப்பினரே பிரதமராக நியமிக்கப்படுவார். உண்மையில் பெரும்பான்மை உறுப்பினர்களுடைய நம்பிக்கையை வென்றெடுத்த பாராளுமன்ற உறுப்பினரையே பிரதமராக நியமிக்க வேண்டுமென்ற வலுக்கட்டாயம் கிடையாது. திரு.பிரேமதாசவை வெட்டிவிடுவதற்கே, இத்தகைய ஓர் உறுப்புரை அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டது என்ற ஒரு கருத்தும் அன்று நிலவியது. ஆனால், திரு.பிரேமதாச அவர்களை தோல்வியுறச் செய்ய முடியவில்லை. அரசாங்கக் கட்சியில் ஒரு நெருக்கடியை ஏற்படுத்தி, "அத்துலத்முதலி" போன்றவர்களை தோல்வியுறச் செய்து திரு.பிரேமதாச முன்னணிக்கு வந்தார். எனவே, திரு.பிரேமதாச அவர்களுக்கு பிரதமர் பதவியை வழங்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. தனக்குத் தேவையான நபரை பிரதமர் பதவிக்கு நியமிப்பதற்கு ஜயவர்த்தன ஜனாதிபதியினால் முடியவில்லை.

## தான்தோன்றித்தனமான அதிகாரத்தை கட்டியெழுப்புதல்

ஜனாதிபதிப் பதவியை நடைமுறைப்படுத்திய முறைமை காரணமாக, நிறைவேற்று ஜனாதிபதி பதவியை நீக்க வேண்டுமென பாரிய மக்கள் அலை 1994 இல் உருவாகியது. பயங்கரவாதம், ஊழல், ஒடுக்குமுறை ஜனாதிபதிப் பதவியுடன் இணைந்திருப்பதை மக்கள் அறிந்தமையாலேயே இந்நிலைமை ஏற்பட்டது. எனவே, நிறைவேற்று ஜனாதிபதிப் பதவியை இல்லாதொழிப்பது பற்றிய கோஷத்துடன் தேர்தலில் போட்டியிட்ட திருமதி சந்திரிக்கா பண்டாரநாயக்க அவர்கள் 1994 பொதுத் தேர்தலில் வெற்றியீட்டினார். கடந்த ஜனாதிபதி தேர்தலின்போது, யுத்தத்தை வெற்றிகண்ட தலைவர் என்ற வகையில், மாபெரும் சக்தியோடு திரு.மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி பதவியை வகித்தாலும், நிறைவேற்று ஜனாதிபதி பதவியை இல்லாதொழிப்பதாக முன்வைக்கப்பட்ட சக்திவாய்ந்த கோஷத்தின் முன்னே அவர் தோல்வியைத் தழுவிக்கொண்டார். நிறைவேற்று ஜனாதிபதி முறைமை எமக்குத் தகுதியானதல்ல என்ற கருத்து மக்கள் மனதில் வேரூன்றி இருந்த காரணத்தினாலேயே 2015 இல் எதுவிதமான பேதமுமின்றி தற்போதைய ஜனாதிபதியை முழு நாடும் தெரிவுசெய்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனாதிபதி பதவிமீது இவ்வளவு தூரம் மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தமைக்கு காரணம் உண்டு. சில ஜனாதிபதிமார் செயற்பட்ட தான்தோன்றித்தனமான முறைமை காரணமாகவே இவ்வளவு தூரம் ஜனாதிபதி பதவிமீது மக்கள் வெறுப்புக் கொண்டனர். அரசியலமைப்புக்கு அமைய ஜனாதிபதி பாராளுமன்ற உறுப்பினர்களை கட்டுப்படுத்த முடியும். அமைச்சரவையைக் கட்டுப்படுத்த முடியும், நீதிமன்றங்களைக் கட்டுப்படுத்த முடியும். ஜனாதிபதி திரு.ஜயவர்த்தன பாராளுமன்றத்தை தனது தற்றுணிபின்கீழ் கொண்டு வந்தார். அன்று பிரதம நீதியரசராக கடமையாற்றிய திரு.நெவில் சமரக்கோன் தான் விரும்பாத வகையில் வழக்குகளின்போது தீர்ப்பு வழங்கியமையால் பிரதம நீதியரசருக்கு எதிராக தனது பாராளுமன்ற உறுப்பினர்களைத் தூண்டி குற்றவழுப் பிரேரணை கொண்டு வரப்பட்டது. சில குண்டர்கள் பயன்படுத்தப்பட்டு அரசாங்கம் விரும்பாத வழக்குத் தீர்ப்பை வழங்கிய ஒரு நீதியரசரின் இல்லத்தின் முன்னே .கற்களை எறிந்து ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது. இந்நடவடிக்கை ஐந்து நட்சத்திர ஜனநாயகத்தின் ஓர் குணாம்சமாக ஜயவர்த்தன ஜனாதிபதி அன்று பிரகடனப்படுத்தினார். தனக்கெதிராக குற்றவழுப் பிரேரணை கொண்டுவரப்பட்டபோது, ஜனாதிபதி திரு.பிரேமதாச அதில் கையெழுத்திட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அமைச்சுப் பதவிகளை வழங்கி, மேற்படி குற்றவழுப் பிரேரணையில் இருந்து பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது கையெழுத்துக்களை வாபஸ் பெறுவதற்கு தூண்டப்பட்டனர். இறுதியில் சபாநாயகரைக் கொண்டு மேற்படி குற்றவழுப் பிரேரணை பாராளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் இருந்தும் நீக்கப்பட்டது. ஜனாதிபதி திரு.மகிந்த ராஜபக்ஷ தனக்கு அவசியமில்லாத பிரதம நீதியரசராக பணியாற்றிய பெண்மணியை ஒருசில நாட்களில் அப்பதவியில் இருந்து வெளியேற்றிய முறையை நாம் கண்டோம். பிரதம நீதியரசர் பதவி மிகவும் பலம்வாய்ந்த ஓர் பதவியாகும். அப் பதவிக்குமேல் எவருமே செல்வாக்குச் செலுத்த முடியாத வகையில் இப்பதவி ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. ஆனால், பிரதம நீதியரசர் பதவியோடு மோதும் நிலைமைக்கு ஜனாதிபதி தள்ளப்பட்டார். அதன் விளைவு அரசியலமைப்பை மீறி பிரதம நீதியரசரை பதவியில் இருந்து விலக்கியமையாகும். இறைமை பற்றி எவ்வளவு கூறினாலும் பாராளுமன்றமும் இந்த நிறைவேற்று ஜனாதிபதி பதவியின் முன்னே பலவீனமானது., நிறைவேற்று ஜனாதிபதி பாராளுமன்றத்தையும் தனக்கு அவசியமான முறையில் வழிநடத்த முடியும். இது கடந்த காலம்முழுவதும் நிரூபிக்கப்பட்டது. இவ்வாறாக அரசியலமைப்பு இந்நாட்டில் நிலவிய ஜனநாயகத்தை பலவீனப்படுத்தி தான்தோன்றித்தனமான அதிகாரத்தை உருவாக்கியது.

## முழுமையான அதிகாரம்

அது மாத்திரமல்ல நிறைவேற்று ஜனாதிபதி பதவிக்குரிய மிக விசாலமான அதிகாரம் காரணமாக நாட்டின் சிவில் சமூகத்தின் பலத்தையும் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முடியும். இராணுவத் தளபதிகள் முதல் தொழில்முயற்சியாளர்கள், முச்சக்கரவண்டி சாரதிமார் வரையும், ,பாதாள உலகத்தின் தூள் (போதைவஸ்துக்கள்) சாம்பிராச்சியம் வரை, ஜனாதிபதி தனது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவர முடியும். இது இவ்வாறு நடைமுறைப்படுத்திய வழிமுறையை நாம் கடந்த காலத்தில் அனுபவத்தில் கண்டோம். இதனை நாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"முழுமையான அதிகாரம்" (வுழவயட °ழறநச) எனக் குறிப்பிடலாம். அரசியலமைப்பில் குறித்துரைக்கப்பட்டுள்ள அதிகார எல்லையைத் தாண்டி தொழில் முயற்சியாளர்களின் அதிகாரத்தையும், பாதாள உலகத்தின் அதிகாரத்தையும், மாஃபியா அதிகாரம் உட்பட சகல விதமான அதிகாரங்களையும் நிறைவேற்று ஜனாதிபதி பதவியின்கீழ் மையப்படுத்த முடியும். கள்ளர்கள், ஊழல் பேர்வழிகள், அலைந்து திரியும் நபர்கள், பாதகர்கள் ஆகிய அனைத்து சமூக விரோத சக்திகளையும் ஜனாதிபதி பதவிக்கு கீழ்ப்படுத்த முடியும். ஜனாதிபதி பதவிக்கு கட்டுப்படுத்த முடியாத எந்தவொரு நபரையும் தனது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவர ஜனாதிபதிப்பதவியினால் முடியும். இதனையே ஜனாதிபதி ஜயவர்த்தனா ஒருசமயம் பின்வருமாறு வலியுறுத்தினார். "தன்னால் ஆணை பெண்ணாக்க முடியாது, பெண்ணை ஆணாக்க முடியாது. ஆனால் அதைத்தவிர அனைத்தையும் தன்னால் செய்யமுடியும்."

## நாட்டின் அரசியல் கலாசாரம் அநாகரீகமான தன்மைவரை கொண்டு செல்லல்

ஆணைப் பெண்ணாக்கவும், பெண்ணை ஆணாக்கவும் மாத்திரமே தன்னால் முடியாது என்று ஜனாதிபதி முன்வைத்த கூற்று ஜனநாயகத்திற்கு முரணான கூற்றாகும். இது உண்மையான ஜனநாயக ஆட்சி நிலவும் ஒரு நாட்டுத் தலைவர் ஒருபோதுமே செய்யக் கூடாத ஒரு பிரகடனமாகும். மக்களால் தெரிவு செய்யப்படும் ஒரு தலைவர் இப்படியாகத் தன்னைவிட வேறொருவரும் இல்லை என்பது போன்ற பிரகடனங்களைச் செய்ய முடியாது. ஆனால், அவர் மக்களின் அதிகாரத்தின்மூலம் தெரிவுசெய்யப்படும் தற்காலிக பொறுப்பாளரே ஒழிய நிரந்தரமான ஆட்சியாளரல்ல. இந்த அரசியலமைப்பின் மூலம் இலங்கையில் அமுல்படுத்தப்படும் அரசியல் கலாசாரத்திற்கமைய அவசியமாயின் திரு.ஜயவர்தன கூறிய செயற்பாட்டை செய்யமுடியும். ஏனெனில், இந்த வழிமுறையின்கீழ் வெட்கத்தையும், பயத்தையும் அறியாத நபர்களே உருவாக்கப்பட்டுள்ளனர்.

நாம் வெட்கம் என்று எண்ணுகின்ற விடயங்களை, எதுவித வெட்கமுமின்றி செயற்படுத்துவதோடு பச்சை பச்சையாக அநாகரீகமான முறையில் நடந்துகொள்ளும் சில அரசியல்வாதிகளின் நடைமுறைகளை கடந்த காலத்தில் அனுபவ வாயிலாகக் கண்டோம். இத்தகைய ஒரு நிலைமைக்கு நாட்டை இட்டுச்சென்று, நாட்டில் நிலவிய ஓரளவு நாகரீகமான சமூகக் கலாசாரத்தை முன்னெடுத்த அரசியலை முழுமையான மாற்றத்திற்கு உட்படுத்தி இந்த நிறைவேற்று ஜனாதிபதி பதவி கடந்த காலத்தில் நடைமுறைப்படுத்தியுள்ளது. இந்த அரசியலமைப்பை முழுமையாக நீக்கி மிகச் சிறந்த அரசியலமைப்பை அங்கீகரிப்பதன்மூலம் குறைந்தபட்சம் நாகரீகமான கலாசாரத்தை மீண்டும் உருவாக்கிக்கொள்ள முடியும்.

## ஜனநாயகத்தைப் பின்தள்ளிய அரசியலமைப்பு

அன்று உலகப் பொருளாதாரத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட திறந்த பொருளாதார முறைமையை இலங்கைக்கும் அறிமுகப்படுத்தும் நோக்கம் அன்றைய ஆட்சியாளர்களுக்கு இருந்த காரணத்தினாலேயே நிறைவேற்று ஜனாதிபதி முறை இங்கு ஸ்தாபிக்கப்படுவதன் அண்மித்த குறிக்கோளாக அமைந்தது. இதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்டகாலமாக இலங்கையில் நிலவிய நலன்புரி அரசை உடைத்தெறியும் நோக்கம் அவர்களுக்கு இருந்தது. அபிவிருத்தியை முன்னெடுப்பதாயின் மக்கள் விரும்பாத தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்படுமென 1962 இல் திரு.ஜயவர்த்தனா குறிப்பிட்டார். அதற்கு வசதி செய்யக்கூடிய நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை இலங்கைக்கு அறிமுகம் செய்ய வேண்டுமெனவும் அவர் அன்று கூறினார். குறைந்தபட்சம் 1958 இல் பிரான்ஸ் நாட்டு ஜனாதிபதி "சார்ள்ஸ் டிகோல்" அறிமுகப்படுத்திய அரசியலமைப்பைப் போன்ற ஓர் அரசியலமைப்பு இலங்கைக்கு அறிமுகப்படுத்த வேண்டுமெனவும் திரு.ஜே.ஆர்.ஜயவர்த்தனாவின் கருத்தாக அமைந்தது. 1972 இன் குடியரசு அரசியலமைப்பு உருவாக்கப்பட்டபோது, அத்தகைய பாரிய அதிகாரங்கள் பிரதமர் பதவிக்கு ஏன் வழங்க வேண்டுமென அவர் கேள்விக்குட்படுத்தினார். அந்த அதிகாரங்கள் ஒரு ஜனாதிபதிப் பதவிக்கே வழங்கப்பட வேண்டுமென்பது அவருடைய கருத்தாக அமைந்தது. அதற்கு உதவியளிப்பதற்கு தான் தயார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதியை பதவியில் இருந்து நீக்குவதாயின் குற்றவழுப் பிரேரணைமூலம் மாத்திரமே அதனைச் சாதிக்கக்கூடிய வகையில் நிறைவேற்று ஜனாதிபதி முறைமை ஸ்தாபிக்கப்பட்டது. குற்றவழுப் பிரேரணையை அமுலாக்குவது இலகுவான காரியமல்ல. பாராளுமன்ற உறுப்பினர்களில் அரைவாசிப் பேர் கையொப்பமிட்ட பிரேரணை ஒன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும். அப்பிரேரணை பாராளுமன்றத்தின் 2/3 பெரும்பான்மையினரால் அங்கீகரிக்கப்பட வேண்டும். அதன்பின்னர அப்பிரேரணை உயர்நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு அதன் ஒப்புதலையும் பெறவேண்டும். மீண்டும் அப்பிரேரணை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து 2/3 பெரும்பான்மை பாராளுமன்ற உறுப்பினர்களால் அங்கீகாரம் பெறவேண்டும். இது இலகுவாக மேற்கொள்ளக்கூடிய ஒரு விடயமல்ல. பிரேமதாச ஆட்சிக்காலத்தில் அத்தகைய முயற்சி மேற்கொண்டபோது அதன் விளைவுகளை நாம் கண்டோம்.

இவ்வாறாக நிறைவேற்று ஜனாதிபதி பதவியை ஸ்தாபிக்கும்போது அபிவிருத்திக்கான பயணத்தில் தங்குதடையின்றி முன்னேற வேண்டுமென்றே திரு.ஜயவர்த்தனா அன்று குறிப்பிட்டார். முதலில் அபிவிருத்தி பின்னர் ஜனநாயகம் (ஞுநளநடழிஅநவெ குசைளவ ஞுநஅழஉசயஉல டுயவநச) என்ற விவாதத்தை ஜே.ஆர். உருவாக்கினார். அதற்கமைய ஜனநாயகம் இன்றல்ல நாளை. எப்போதும் ஜனநாயகம் பின்னர். இந்த அரசியலமைப்பு அமுலில் இருக்கும்வரை ஜனநாயகம் நாளைக்கு என்ற கதையே தொடரும். அது மீண்டும் ஒருபோதும் உதயமாகாத நாளையாகும். ஏனெனில் இந்த அரசியலமைப்பு சட்டத்தின் ஆட்சியை ஒதுக்கி சட்டத்தை விஞ்சி ஒரு தனிநபரின் ஆட்சிக்கான வாய்ப்பையே வழங்குகிறது.

## சட்டத்தின் ஆட்சிக்குப் பதிலாக தனிநபர் ஆட்சிக்கு சந்தர்ப்பம் வழங்குதல்

சனசமூகத்தின் உணர்வுகளுக்கும், தீவிரஉணர்ச்சிகளுக்கும் அடிபணியாத, ஆட்சியாளர்களின் தான்தோன்றித்தனமான குடும்ப ஆட்சி ஏற்படுவதைத் தடுக்கும் சிறந்த ஆட்சியாக ஜனநாயகம் மலர வேண்டுமாயின் மக்களாகிய எம்மையும் .எமது ஆட்சியாளர்களையும் ஒரே நேரத்தில் கட்டுப்படுத்தக்கூடிய ஓர் சட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம் எல்லோருக்கும் மேலாக ஸ்தாபிக்கப்பட வேண்டும். 2500 ஆண்டுகளுக்கு முன்னர் ஏதென்ஸ் நகர அரச ஆட்சியில் வாழ்ந்த "அரிஸ்டோட்டில்" என்ற அறிஞர் முன்வைத்த கருத்தே இது. இது சட்டத்தின் ஆட்சியெனக் குறிப்பிடப்படுகிறது. ஜனநாயகத்தை முன்னகர்த்துவதாயின் ஆட்சியாளரும் ஆளப்படுபவர்களாகிய மக்களும் சட்டத்திற்கு அடிபணிய வேண்டும். தேர்தல்கள் நடத்தப்படும் ஒரே காரணத்தினால் ஜனநாயகம் ஏற்பட மாட்டாது. ஜனநாயகம் உறுதிப்படுத்தப்பட வேண்டுமாயின் மேற்குறிப்பிட்டவாறு சட்டத்தின் ஆட்சி உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

1978 அரசியலமைப்பின் கீழ் நிறைவேற்று அதிகாரத்தை கட்டுப்படுத்தும் நபரான நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி சட்டத்தைவிட மேலே இருப்பவராவார். ஜனாதிபதி மேற்கொள்ளும் நிறைவேற்று நடவடிக்கைகள் மாத்திரமல்லாது, அவரது தனிப்பட்ட நடவடிக்கைக்கு எதிராகவும், நீதிமன்றத்திலே வழக்குத் தொடர முடியாது. ஆட்சியாளர் சட்டத்திற்குமேல் செயற்படுவாரேயாயின் அங்கு சட்டத்தின் ஆட்சி இடம்பெற மாட்டாது. சட்டத்தின் ஆட்சி இல்லையேல் அதற்கு ஜனநாயகம் எனக் கூறமுடியாது. ஜனநாயகம் என்பது மக்கள் தமது வாக்குகளினால் தெரிவுசெய்யும் பிரதிநிதிகளால். சட்டத்தின்மூலம் மேற்கொள்ளப்படும் ஆட்சியாகும். எனவே, எமக்கு தற்போதைய அரசியலமைப்பின் மூலம் ஜனநாயகம் கிடைக்க மாட்டாது.

## எமது அரசியலமைப்பின்படி அரசனாக முடியாது.

அரசியலமைப்பே அரசனாவான்.(ஊழளெவவைரவழைெ ளை வாந முஎைப) என்று "தோமஸ் பெயின்" குறிப்பிட்டார். அதன்படி சட்டமே அரசனாகும். எமது அரசியலமைப்பின்படி ஒரு தனிநபர் அரசனாக முடியாது. அதற்குக் காரணம் எமது அரசியலமைப்பு ஒரு தனிநபரின் ஆட்சியை அமைப்பதற்கு உருவாக்கப்பட்ட அரசியலமைப்பாகும். இம்முறை அரசியலமைப்பு ரீதியாக ஓர் சர்வாதிகாரியை உருவாக்குவதற்கு வாய்ப்புள்ளது. திரு.ஜயவர்த்தன ஜனாதிபதியாவதற்கான , அரசியலமைப்பைத் திருத்துவதற்கு, ஆலோசனை வழங்குவதற்கென 1978 இல் பேராசிரியர் ஏ.ஜே.வில்சன் இலங்கைக்கு வருகை தந்தார். இதுவிடயமாக கலந்துரையாடியபோது அன்று ஆட்சிசெய்த குழுவினருக்கு இந்த அரசியலமைப்பு ஒரு சர்வாதிகாரியை உருவாக்குவதற்கு வழிவகுக்கும் குறிக்கோளுடனேயே உருவாக்கப்பட்டதென பேராசிரியர் ஏ.ஜே.வில்சன் எடுத்துக் கூறினார். தனது அரசியலமைப்பு ரீதியான சர்வாதிகாரியை உருவாக்குவதற்கு வழிவகுக்கும் குறிக்கோளுடன் இது உருவாக்கப்பட்டது. அதிகாரத்தை மட்டுப்பாடின்றி அனுபவிப்பதற்கும், சுவைப்பதற்கும் விரும்பும், அதிகாரத்தில் உள்ளவர்களும், தாம் அதிகாரத்திற்கு வரலாமென்று எண்ணுபவர்களும் மாத்திரமே இந்த அரசியலமைப்பை விரும்புவார்கள். மக்களின் அதிகாரம் மீது நம்பிக்கை வைப்பவர்கள் அவ்வாறு செயற்பட மாட்டார்கள் எனவும் வில்சன் குறிப்பிட்டிருந்தார்.

## அரசியல்வாதிகள் புதிய வர்க்கமாக மாறுதல்

திறந்த பொருளாதாரத்தின் காரணமாக ஏற்பட்டுள்ள செயற்பாடு காரணமாக அரசியல்வாதிகள் நன்மைபெறும் நிலைமையே ஏற்பட்டுள்ளது. ஏனெனில் தற்போது அரசாங்கத்தின் கூட்டாண்மைகள் பல பில்லியன் ரூபாய் பெறுமதியான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்திட்டங்களை கொண்டவையாக உள்ளன. கால்மார்க்ஸ் குறிப்பிட்டவாறு பொருளாதார மாதிரியின்மூலம் உருவாக்கப்படும் வர்க்கங்களுக்கு மேலதிகமாக அரசியல் அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு, தற்போது புதியதோர் வர்க்கம் உருவாகி உள்ளது. அரசாங்கத்தின் கூட்டு அரசியல் அதிகாரத்தை ஓர் சொத்துடமை முறைமையாக மாற்றிக்கொண்டு அதன்மூலம் எம்மைப் பொருளாதார ரீதியில் சுரண்டும் வர்க்கமாக அரசியல்வாதிகள் இன்று எழுச்சி பெற்றுள்ளனர். இன்று எமது தேசத்தின் பொருளாதாரம் இறுதி நிதி விளைவை ஏற்படுத்தியுள்ளது என்பதை நாம் கவனத்திற்கொள்ள வேண்டும். அவர்களால் பல்வேறு சொத்துக்களை சுவீகரிக்க முடியும். அதுமாத்திரமல்லாமல் நாம் அந்த வரக்கத்தை பராமரிக்க வேண்டியுள்ளது. அவர்களுக்கான அலுவலகங்களுக்கும், வாகனங்களுக்கும் ஏனைய வசதிகளை வழங்குவதற்கும் பல பில்லியன் ரூபாய்க்களை பொதுமக்களின் வளங்களில் இருந்து செலவு செய்ய வேண்டும். அரச வளங்களை இவ்வர்க்கங்கள் சுரண்டுவதிலிருந்து பேணிப்பாதுகாப்பதற்கு புதிய அரசியலமைப்பு அவசியப்படுகிறது. அதற்கு இறுக்கமான நிதி ஒழுங்குமுறை பின்பற்றப்பட வேண்டும். வெளிப்படைத் தன்மைகொண்ட விதத்தில் அரசாங்கத்தின் கொடுக்கல்வாங்கல் நிகழ்வதை உறுதிப்படுத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ள வேண்டும். இவை அரசியலமைப்பின் சுயாதீன ஆணைக்குழுக்கள் மூலம் மேலும் வலுவூட்டப்பட வேண்டும். அவை அரசியல் அதிகாரத்திற்கு அடிபணியாமல் சுதந்திரமாக தீர்மானங்களை மேற்கொள்ளக்கூடிய அதிகாரத்தை வழங்க வேண்டும். இச்சுயாதீனக் குழுக்களின் உறுப்பினர்கள் அரசியலமைப்புச் சபையின்மூலம் நியமனம் பெறவேண்டும். இச்சபையின் உறுப்பினர்கள் அரசியல் துணையுடன் நியமிக்கப்படக் கூடாது.

## ஒழுங்குமுறையில் எழுதப்பட்ட புதிய அரசியலமைப்பு அவசியமாகும்

அடிப்படை ஜனநாயக ஆட்சிமுறைக்குத் தடையான நிலைமைகளுக்காக அரசியலமைப்புத் தீர்வுகளை நாடுவது அவசியமாகும். அது மாத்திரமல்ல 21ஆவது நூற்றாண்டிற்கும் அப்பால் நாம் செல்லக்கூடிய ஒரு சுற்றாடலை சிருஷ்டிக்கக் கூடிய அரசியலமைப்பு எமக்கு அவசியமாகும். ஒட்டுவேலைகள் நிரம்பிய அரசியலமைப்பு அவசியமில்லை. ஆரம்பத்திலிருந்தே இறுதிவரை தொடர்புகொண்டு எழுதப்பட்ட புதிய அரசியலமைப்பே நாட்டிற்கு அவசியமாகும்.

அவ்வாறின்றி நிறைவேற்று ஜனாதிபதி முறையை மாத்திரம் இல்லாதொழிப்பதன் மூலம் அந்த அதிகாரமானது பிரதமரிடம் சென்றடையும். 1972 அரசியலமைப்பின்படி மட்டுப்பாடற்ற நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஓர் பிரதமரே பதவி வகித்தார். தற்போதைய அரசியலமைப்பு இன்றைக்குப் பொருத்தமில்லை. முதலில் அபிவிருத்தி என்ற கோஷத்திற்குப் பதிலாக முதலில் ஜனநாயகம் என்றே கோஷம் அமைய வேண்டும். 60 ஆண்டுகளுக்குப் பின்னரும் இலங்கை தொடர்ந்தும் அபிவிருத்தியடைந்து வரும் ஒரு நாடாகும். பல மாடிக் கட்டிடங்களும், நெடுஞ்சாலைகளும் உருவாக்கப்பட்டிருக்கலாம். ஆனால், அவற்றில் சஞ்சரிக்கும், வாழும் மனிதர்களுக்கு என்ன நடந்திருக்கிறது? நடத்தை மோசமான மனிதப் பரம்பரை எம்முன் தோன்றியுள்ளதல்லவா? அரசியல் ரீதியாக நாம் அபிவிருத்தியின்மையை மேம்படுத்தி இருக்கிறோம் அல்லவா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விமுறை சீரழிந்துள்ளது. சிந்திக்க முடியாத மனிதர்களே உருவாக்கப்பட்டுள்ளனர். எனவே, இனவாதம் மிக இலகுவில் சமூகமயமாகும் நிலைமை தோன்றி உள்ளது.

## மக்களின் அதிகாரத்தைக் கட்டியெழுப்புதல்

மக்களின் அதிகாரத்தை உறுதிப்படுத்துவதற்கே புதிய அரசியலமைப்பு எமக்கு அவசியமாகிறது. ஜனநாயகத்திற்கு முக்கியமானது பிரஜைகளின் அதிகாரமேயாகும். ஜனாதிபதியினதும், பிரதமரினதும் அதிகாரமல்ல. கொடுப்பதை வாங்கி உண்டு நடப்பதை எதிர்பார்த்திருப்பதற்கே எமது அரசியலமைப்புக்கள் மக்களைப் பயிற்றுவித்துள்ளது. சிவில் சமூகத்தின் சிந்தனை வளர்ச்சியடைவதற்கான வாய்ப்புக் கிடையாது. இந்நிலைமை மாற்றியமைக்கப்பட வேண்டும். அமுலில் உள்ள அரசியலமைப்பிற்குப் பதிலாக புதிய அரசியலமைப்பிற்காக ஆர்ப்பாட்டம் செய்யவேண்டும். இதுவே முக்கிய விடயமாகும். அரசியல் துறையின் அதிகாரம் சரிபார்த்தலுக்கு உள்ளடக்கப்படும் அளவிற்கே மக்களின் அதிகாரம் கட்டியெழுப்பப்படும். வெகுஜனங்களின் அமைதியான, சுகமான வாழ்க்கையைக் கட்டியெழுப்புவதற்கு அவசியமான வகையில் எல்லாத் துறைகளும் மேம்படுத்தப்பட வேண்டும். மோசடிகள், ஊழல்களற்ற, கேள்விக்குட்படுத்தக் கூடிய அரசே உருவாக்கப்பட வேண்டும். நிருவாகிகளும், முகாமையாளர்களும், விசேடமாக கல்வியியலாளர்களும், விஞ்ஞானிகளும் சுயாதீனமாக தமது பொறுப்பை நிறைவேற்றக்கூடிய வகையிலும், அவர்களின் நடவடிக்கைகளை தடையின்றி மேற்கொள்ளக் கூடிய வகையிலும், சமூகம் அமைய வேண்டும் என்றே நாம் குறிப்பிடுகிறோம்.

இன்று உரிமைகள் பற்றிய கலந்துரையாடல், சிவில் மற்றும் அரசியல் நடவடிக்கைகளுக்கு ஏற்புடைய வகையில், பிரஜைகளின் உரிமைகளையும் தாண்டி முன்னேறியுள்ளது. இலவசக் கல்வி, இலவச சுகாதார சேவை, சமூகசேவை என்பவற்றை பேணிப்பாதுகாக்கக் கூடிய வகையில் நிருவாக சேவை தூய்மையாக்கப்பட வேண்டும். சுற்றாடலுக்கு உரித்தான உரிமைகளையும் அத்தாட்சிப்படுத்தக்கூடிய வகையில் அவற்றை வழங்குவது இன்று காணப்படும் முக்கிய விடயமாகும். புதிய அரசியலமைப்பு சமாதானத்திற்கு எமக்குரித்தான உரிமைகளையும் ஏற்றுக்கொள்ளும் ஓர் அரசியலமைப்பாக அமைய வேண்டும். அத்தகைய ஓர் அரசியலமைப்பு அனைத்து இனங்களையும், மதங்களையும் சமத்துவத்தோடு கவனிக்கும் அடிப்படையைக் கொண்ட ஓர் அரசியலமைப்பாகும். நாட்டின் ஆட்சி அதிகாரத்தை தமது பிரதிநிதிகள் மூலம் பங்குபற்றச் செய்வதற்கு மக்களுக்கு பூரண வாய்ப்பு இருத்தல் வேண்டும். தற்போதைய அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள நல்ல ஏற்பாடுகளை மேலும் முன்னெடுத்துச் செல்லும் சந்தர்ப்பம் ஏற்படுத்தப்பட வேண்டும். தற்போதைய அரசியலமைப்பில் உள்ள சிறந்த ஏற்பாடுகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட வேண்டும். மக்களின் அதிகாரத்தைப் பலவீனப்படுத்தும் அம்சங்களை நீக்க வேண்டும். மக்களின் அதிகாரத்தைப் பலவீனப்படுத்தும் மோசடியான அரசியல்வாதிகளுக்கான வாய்ப்பை இல்லாதொழிக்க வேண்டும்.

1978 அரசியலமைப்பின் சிருஷ்டிகர்த்தாவான திரு.ஜே.ஆர்.ஜயவர்த்தன தனது பதவியில் இருந்து ஓய்வுபெற்ற பின்னர் அரசியலமைப்பிற்கான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருத்தங்கள்பற்றிக் கூறிய கருத்தை இங்கு கவனத்திற்கொள்ள வேண்டும். "ஒரு குழந்தையை தண்ணீர் பாத்திரத்தில் வைத்து கழுவிய பின்னர் அசுத்தமான நீரையே வெளியே வீசுகின்றோம். குழந்தையை வீசிவிட மாட்டோம். இதேபோலத்தான் ஓர் அரசியலமைப்பின் நல்லம்சங்களை வைத்துக்கொண்டு தீய அம்சங்களை வீசிஎறிய வேண்டும்." இது உண்மை. இந்த அரசியலமைப்பில் மிச்சப்படுத்த வேண்டிய நல்ல விடயங்கள் இருக்கின்றன. உதாரணம் அடிப்படை உரிமைகள்பற்றிய அத்தியாயம், அடிப்படை உரிமைகளைப் பேணிப் பாதுகாப்பதற்கு நிதிமன்றத்திற்கு வழங்கிய அதிகாரம், மொழிஉரிமைகள், சிங்களத்தையும் தமிழையும் தேசிய மொழிகளாக அங்கீகரித்தல், மாகாண மட்டத்தில் பகிரப்பட்ட அதிகாரங்களைக் கொண்ட மாகாணசபைகள் முறைமை ஆகியவற்றை நாம் பேணிப்பாதுகாக்க வேண்டும்.

மாகாணசபைகள் மூலம் நாடு பிளவுபடுமென்று ஆரூடம் கூறியவர்கள் பின்னர் மாகாணசபைகளோடு இணைந்து அவற்றை முன்னெடுத்தனர். அதன்மூலம் நாடு பிளவுபடவில்லை. காரணம்: அவ்வாறு நாட்டைப் பிளவுபடுத்துவதற்கு அவற்றிற்கு அதிகாரம் இல்லாத காரணத்தினாலேயாகும். நடைமுறை ரீதியில் நோக்கும்போது மத்திய அரசாங்கத்தின் அதிகாரம் நடைமுறையில் மத்திய அரசாங்கத்திற்கே உண்டு.. ஆனால், தமது பிரதேச வளங்களை மேம்படுத்தி, அபிவிருத்தியை பிரதேச மட்டத்திற்கு எடுத்துச் செல்லும் பொறுப்பு மாகாணசபைகளால் நிறைவேற்றப்பட வேண்டும். பாராளுமன்றச் சட்டங்களுக்கு அமைவாகவும், தேசியக் கொள்கைகளின் கீழும் மாகாணத்தின் அபிவிருத்தியை அமுல்படுத்தக்கூடியவாறு நியதிச்சட்டங்களை மாகாணசபைகள் தயாரிக்க வேண்டும். அரசியலமைப்பினால். மாகாணசபைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள விடயங்களை அமுல்படுத்த வேண்டும். இந்நியதிச் சட்டங்களின் வரைவுகளைத் தயாரிக்கும் ஆற்றல் உரிய முறையில் வழங்கப்படாமையால், மாகாண சபைகள் நிறைவேற்றப்பட்டு 28 ஆண்டுகளின் பின்னரும் இந்நடவடிக்கைகள் சரியான முறையில் செயற்படுத்தப்படுவதில்லை. மறுபுறம் அவசியமான நிதி மற்றும் நிருவாக வளங்கள் இல்லாமை காரணமாக பிரதேச அபிவிருத்தியின்போது மத்திய அரசாங்கத்தின் உதவி ஒழுங்காகக் கிடைப்பதுமில்லை. உள்ளூராட்சி நிறுவனங்களின் நடவடிக்கைகளை முகாமைத்துவம் செய்து மக்களின் பிரதேச பிரச்சினைகளைத் தீர்க்கும் மத்திய நிலையங்களாக மாகாணசபைகள் வளர்ச்சியடைய வேண்டும். அதிகாரத்தை ஒவ்வொரு இடத்திலும் மையப்படுத்தாமல் பல்வேறு மத்திய நிலையங்கள் மூலம் செயற்படுத்துவதற்கு மாகாண சபைகள் ஊக்குவிக்கப்பட வேண்டும். இதன்மூலம் பொதுமக்கள் தமது வாக்குரிமையை பல்வேறு சந்தர்ப்பங்களில் பயன்படுத்துவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. அதன்போது அரசியல்வாதிகளுக்கு தமது கருத்துக்களை எடுத்துக்கூறும் சந்தர்ப்பங்களும் பொதுமக்களுக்கு கிடைக்கிறது. மாகாணசபைகள் முறைமை அன்று அவசரகாலச் சட்டத்தின்கீழ் அங்கீகரிக்க முற்பட்டமையால் அதிகாரப் பகிர்வு தொடர்பான அரசியலமைப்பு ஏற்பாடுகள் விரிவான முறையில் மக்கள் மத்தியில் விவாதிக்கப்படவில்லை. இன்று அன்றுபோன்ற அவசரமில்லை. எனவே, கவனமாக மீண்டும் கவனித்து இம்முறையைவிட சிறந்த பயனுள்ள திருத்தங்களை மேற்கொள்ள முடியும். இலங்கை ஒரு சிறிய நாடாயினும் கிராமிய பிரதேசங்களில் உள்ள பிரச்சினைகளை நோக்கும்போது ஓர் தனி அரசாங்கம் தீர்க்கமுடியாத பாரிய பிரச்சினைகள் உண்டு. எனவே, மத்திய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கமும், மாகாணசபைகளும் இணைந்தே பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண வேண்டும். " கொழும்பிற்கு பால், எமக்கு கெக்கரிக்காய்" என்ற பாரபட்சங்கள் இன்னும் தீர்க்கப்படவில்லை. எனவே, மாகாணசபைகள் மாத்திரமல்ல, உள்ளூராட்சி அதிகார சபைகளின் பணிகளும் விடயங்களும் தெளிவாகக் குறிப்பிடப்பட்ட வேண்டும். அவற்றிற்கு அவசியமான வளங்களும், அதிகாரமும் வழங்கப்பட வேண்டும். பொதுமக்களின் வாழ்க்கைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் அவற்றிற்கான அழுத்தங்களைக் கொடுப்பதற்கும் மக்களுக்கு நிறுவனங்களை அமைத்துக் கொடுத்தல் வேண்டும். மக்களுடைய அவசியங்களை பேணிப்பாதுகாக்கக் கூடிய வகையில் "காவல் நாய்கள்" (றயவஉா னழபள) போன்ற நிறுவனங்களை உருவாக்கிக் கொடுக்க வேண்டும். தற்போதைய அரசியலமைப்பில் பௌத்த மதத்திற்கு வழங்கப்பட்டுள்ள முதன்மை ஸ்தானம், இலங்கை அரசின் ஒற்றை ஆட்சி இயல்பு நாட்டை பிளவுபடுத்த முடியாது போன்ற விடயங்கள் தற்போது இருப்பதைப் போலவே தொடர்வதற்கு அனைத்து கட்சிகளும், வடக்கு தெற்கு என்ற பேதமின்றி இணக்கப்பாடு கண்டுள்ளன என அறிக்கைகள் கூறுகின்றன. எனவே, அவற்றைப்பற்றி உருவாக்கப்படும் "போலி வதந்திகளிடம்" சிக்காமல் அரசியலமைப்பின் அதிகாரம் தர்க்க ரீதியாக கலந்துரையாடலுக்கு உட்படுத்துவதற்கு அனைவருக்கும் அழைப்பு விடுக்கிறோம்.

ஜனநாயக நாட்டை ஐக்கியப்படுத்தும் ஆட்சியாளர்களின் அதிகாரங்களுக்கான மட்டுப்பாடு கொண்ட ஓர் அரசியலமைப்பையே நாம் எதிர்பார்க்கின்றோம். நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிக்க வேண்டும். அதற்குப் பதிலாக ஸ்தாபிக்கப்படும் நிறைவேற்று முறைமையைப் பற்றியும், தேர்தல் முறைபற்றியும் ஓர் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக்கொள்ளுமாறு அரசியல் தலைமைத்துவங்களுக்கு வலியுறுத்த வேண்டும். நீதித்துறை, அரசசேவை, பல்கலைக்கழகங்கள், ஆராய்ச்சி நிலையங்கள், என்பன தடையின்றி தீர்மானங்களை மேற்கொள்ளக்கூடிய வகையில் அரசியலமைப்பு தயாரிக்கப்பட்ட வேண்டும். "உமாஓய", "மீதொட்டமுல்லை" போன்ற சுற்றாடல் ரீதியான அனர்த்தங்கள் ஏற்படாத வகையில் மக்கள் வாழ்க்கையை முன்னெடுப்பதற்கு பொருத்தமான நிறுவனங்கள் சுயாதீனமான தீர்மானங்களை மேற்கொள்ள வழிசமைக்க வேண்டும். இதற்கு அரசியலமைப்பு சாதகமாக அமையவேண்டும். பிரஜைகளின் உரிமைகள் என்ற அத்தியாயத்தின்கீழ் கல்வி, சுகாதாரசேவை, சமூக நலன், பாதுகாப்பு, நியாயமான நிர்வாகம் என்பன எமது உரிமைகளாக ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் அரசியலமைப்பு விரிவடைய வேண்டும். இத்தகைய இணக்கப்பாடுகளை ஏற்படுத்துவதன்மூலம் மிகச் சிறந்த அரசியல் கலாசாரம் உருவாகும் வகையில் நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மிகச் சிறந்த அரசியலமைப்பை உருவாக்க முடியாவிட்டாலும், இன்றைய தினத்தைவிட பிரஜைகளுக்கு அதிகாரத்தை வழங்கும் நாளைய அரசியலமைப்பைக் கட்டியெழுப்புவதற்கு அயராது உழைப்போம். பிரஜைகளின் அதிகாரத்தை உறுதிப்படுத்தும் அரசியலமைப்பு எமக்குக் கிட்டும்வரை நாம் முன்னோக்கிச்செல்வோம் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org